விலை ரூபா 1-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 29 | தை 22 | ஜ. ஆகிர் பிறை 16 | இதழ் 251

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 5-2-1988

## யாழ்ப்பாணத்தில் பூரண துக்கதினம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை சுதந்திரதினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு 'ஈரோஸ்' விடுத்தகோரிக்கையைத் தொடர்ந்துயாழ்ப்பாணத்தில் நேற்று பூரணதுக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசுதமிழர்பிரச்னையைகளைத் தீர்ப்பதற்கு பதிலாக தமிழர் அமைப்புகளை அழிக்கமுயலும் செயல்களைக் கண்டித்தும் தமிழ்முஸ்லிம் மக்களை அழித்தொழிப்பதற்காக ஒப்பந்தத்தைத் திரிபுபடுத்தி இலங்கை அரசு இராணுவபலத்தை பிரயோகித்து வருவதை கண்டித்தும் இலங்கையின் நாற்பதாவது சுதந்திரதினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு ஈழப்புரட்சி அமைப்பு [ஈரோஸ்] வேண்டுகோள்விடுத்திருந்தது.

துக்கதினத்தையொட்டி யாழ்நகரிலுள்ள வர்த்தகநிலையங்கள் பூட்டப்பட்டிருந்ததுடன், மினி சினிமா அரங்குகளிலும், தியேட்டர்களிலும்படங்கள் காண்பிக்கப்படவில்லை.

நேற்றுகாலை ஓரளவு சனநடமாட்டமும், ஓரிரு மினிபஸ் போக்குவரத்தும் காணப்பட்டபோதிலும் 10 மணிக்குப் பின்னர் நடமாட்டங்கள்குறைந்து நண்பகலுடன்வெறிச் சோடிக் காணப்பட்டது.

# "இந்திய இராணுவம் இன்றேல் அந்நியப்படை வந்திருக்கும்!"

## பாரத முன்னாள் தளபதி கருத்து

(புதுடில்லி)

**'இலங்கைக்குஇந்திய அமைதிப்படை சென்றிருக்காவிட்டால் அங்கு வேறொரு அந்நியப்படை நிலைகொண்டிருக்கும்" என்று முன்னாள் இந்திய இராணுவத் தளபதிபீல்ட்மார்ஷல் மனெக்ஷோ கருத்து வெளியிட்டுள்ளார்.**

பீல்ட்மார்ஷல் மனெக்ஷோ நேற்று பத்திரிகையாளர் மகாநாடொன்றில் பங்குபற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலைகொண்டிருப்பதை அவர் பெரிதும் வரவேற்றுக் கருத்து வெளியிட்டார்.

அவரது இக்கருத்து இந்தியப் பிராந்திய நலன் கருதுவதாகவே பெரிதும் காணப்பட்டது.

இலங்கை ஒரு கேந்திரப் பகுதி என்றும், இங்கு ஏதாவது ஓர் அந்நியப்படை வந்திருக்குமானால் அது இந்தியாவுக்கே அச்சுறுத்தலாக இருக்குமெனவும் இந்நிலைமையைத் தவிர்க்க இந்திய அமைதிப்படையை இலங்கையில் வைத்திருப்பது ஒரு நல்ல நடவடிக்கை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மா தட்டுப்பாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மாவுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் மாவின் விலை கிலோவுக்கு 2 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதனால் பாணின் விலையும் கூடியுள்ளது.

மாவுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு பற்றி வர்த்தக வட்டாரங்கள் தகவல் தருகையில்: கொழும்பு-யாழ் லொறிச் சேவை திருப்திகரமாக நடைபெறாமையே இத்தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரி பொலிசில்----

## புகார் செய்ய மீண்டும் வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் இயங்கிவரும் பொலிஸ் பிரிவின் செயற்பாடுகள் கடந்த 2ம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் அசம்பாவித சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களின் முறைப்பாடுகள், அடையாள அட்டை, லைசன்ஸ் போன்ற பொருள்கள் காணாமல் போனது தொடர்பான முறைப்பாடு ஆகியவையே இப்பிரிவில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இதுதொடர்பாக இதுவரை ஐயாயிரத்துக்குமதிகமான முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தினமும் இருபத்தைந்து முறைப்பாடுகள் வரையே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

முறைப்பாடுகள் ஒவ்வொன்றிற்கும் கட்டணமாக இரண்டு ரூபா அறவிடப்படுகின்றது. (கு)

## பரீட்சை நிலையத்தில் ஊழல்? அமைச்சருக்குப் புகார்

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. சாதாரண தரப் பரீட்சையின்போது கிளிநொச்சியில் உள்ள பரீட்சை நிலையம் ஒன்றில் இடம்பெற்ற ஊழல் பற்றி அந்தப் பகுதிப் பெற்றோர் கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளர், பரீட்சை ஆணையாளர் ஆகியோருக்குப் புகார் செய்துள்ளனர்.

வடபகுதி அசம்பாவித சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றிய பரீட்சை மண்டபத்தில் கடமையாற்றிய கல்வித் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவரின் நடவடிக்கை குறித்தே புகார் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அதிகாரி பரீட்சை அதிகாரிகளுக்கான விதிமுறைகளுக்குவிரோதமாகக் கடமையாற்றியதுடன் தமது சொந்த நன்மை கருதிச் சில தவறான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார் என்றும் அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குடிநீர் தட்டுப்பாடு!

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப்பகுதியில் கடந்த மூன்று வருடகாலமாக குழாய் நீர் விநியோகம் தடைபட்டுள்ளது.

நெடுந்தீவுப் பகுதியில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது (கு)

வர்த்தக வாகன சாரதி லைசென்ஸ்

## 3 வருடங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள அனைத்து வர்த்தக வாகன சாரதிகளும் இவ்வாண்டு மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன் தமது சாரதி அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிக்க வேண்டும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் உத்தரவொன்றை வெளியிட்டிருந்தபோதிலும் 3 சதவீதத்தினரே இதுவரை தமது சாரதி அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்துள்ளனரென மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்

3 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டிய வர்த்தக சாரதி அனுமதிப் பத்திரம் மூன்று வருடங்களுக்குத்தான் செல்லுபடியாகும். இந்த அனுமதிப்பத்திரத்தைப் பெறுபவர்கள் முதலில் நுகேகொடவில் அமைந்துள்ள இலங்கைபோக்குவரத்துச்சபை வைத்திய நிலையத்தில் 150ரூபா செலுத்தி வைத்திய சோதனை செய்ய வேண்டும். இதில் தகுதிபெற்றவர்கள் 130 ரூபா செலுத்தி வர்த்தகவாகனசாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

## வீதியால் சென்றபெண்ணிடம் தாலிக்கொடி அபகரிப்பு

(சுழிபுரம்)

வீதியால் தமது பிள்ளைகளுடன் சென்ற இளம் பெண்ணிடமிருந்து பட்டப்பகலில் இளைஞரொருவர் தாலிக்கொடியை அறுத்துச் சென்றுள்ளார். இச் சம்பவம் பண்ணாகத்தில் கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது.

தமது பிள்ளைகளுடன் இவ் இளம் பெண் சென்று கொண்டிருந்த சமயம் அவ்விடம் வந்த இளைஞரொருவர் முகவரியொன்றை விசாரித்துவிட்டு திடீரென அப்பெண் அணிந்திருந்த இரண்டுபவுண் பெறுமதியான தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு தலைமறைவாகிவிட்டார். உடனடியாக அயலவர்கள் கூடியும் திருடனை பிடிக்கமுடியவில்லை.

பண்ணாகம் பகுதியில் கடந்த சில வாரங்களாக இவ்வாறான சம்பவங்கள் அதிகளவில் இடம் பெற்று வருகிறது.

## அ. தி. மு. க. தலைவராக ஜானகி தெரிவு; ஜெயலலிதா குழு வெளியேற்றமுடிவு

[சென்னை]

அகிலஇந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அ. தி. மு. க.)தலைவராகமுன்னாள் முதலமைச்சரும், மறைந்த முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனின் பாரிபாருமான திருமதி ஜானகி ராமச்சந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அ தி மு கவின்பொதுச் சபைக் கூட்டத்திலேயே இத் தெரிவு இடம்பெற்றது.

694உறுப்பினர்களைக்கொண்டிருக்கும்இக்கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்களில் 400 உறுப்பினர்களுக்கும் அதிகமானோர் இச்கூட்டத்தில் கலந்து கொண்டனர்

கட்சியின்பொதுச்சபையைச் சேர்ந்த உறுப்பினர்களில் பலர் கைது செய்யப்பட்டுள்ள

(6-ம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்திச்சபை பிரதேச சபையானது

[பலாலி]

காங்கேசன்துறை உப மாவட்ட அபிவிருத்தி சபை பிரதேசசபையாக மாற்றம் பெற்றுள்ளது.

இப்புதிய பிரதேச சபையின் தலைவராக உதவி அரசாங்க அதிபரே கடமையாற்றுவார்.

தேர்தலின்பின் மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதியே தலைவராகப் பணியாற்றுவார்.

தெல்லிப்பழை, மயிலிட்டி, மல்லாகம் ஆகிய மாவட்ட உப அபிவிருத்தி சபை அலுவ

(6ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

C-90 கொண்டா (Econo Power) நீலம் 88 ஸ்ரீ தொடர் புதியது உடனடி விற்பனைக் குண்டு வ. திருச்செல்வராஜா, நந்தாவில் அம்மன் கோவிலடி, கோண்டாவில். சி-2012

புறெயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் 5-ந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். பதிவு செய்க சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். சி-1960

சிறுவர்களுக்கான புதிய நூல்கள் மற்றும் பல அரிய நூல்கள் தற்போது வந்து விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, (புத்தகப் பகுதி) இல 15/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். ஏ-2500

Kandy Uplands Farm Ltd கோழிக்குஞ்சுகள் 18-2-88 வியாழக்கிழமை காலை விநியோகிக்கப்படும். லோமான் பிறவுண் [ஜேமன்] பேட்டுக் குஞ்சு ரூபா 12-50, லோமன் சேவல் ரூபா 4-00 முன்கூட்டியே உடனே பதிவுசெய்து கொள்ளுங்கள். தொகையாக எடுப்பவர்களுக்கு விஷேச சலுகை உண்டு S Godwin, No 09, Kandiah Lane, Chunnakam East, Chunnakam. [ஸ்டேசனுச்கு அருகாமையில்.] சி-2032

## தேவை

பிரபல நிறுவனமொன்றிற்கு அனுபவமுள்ளபெண்காசாளர் உடன் தேவை. தொடர்பு: பாலாஜி ரேட் சென்றர், 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், [வெலிங்டன் சந்திக் கருகாமையில்]. சி-2035

ஆங்கில அச்சுக் கோப்பளர்கள் (கொம்பஸிட்டர்ஸ் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்; செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம். சி1959

நல்ல நிலையில் பாவிக்கப்பட்ட யப்பான் ரக வான் (Van) அல்லது கார் (Car) நியாயமான விலையில் உடனடியாகத் தேவை. விபரங்களுக்குதொடர்பு: 21/1, கலைப் புலவர் வீதி, யாழ்ப்பாணம். சி-2028

## சேவை

எம்மிடம்வைத்தியர், பொறியியலாளர்கள், விரிவுரையாளர்கள் முதற்கொண்டு சகல தரத்திலும் மணமக்கள் உள்ளனர். தொடர்புகொள்க: V. I. N, மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம், ஆனைக் கோட்டை, சி-2039

Motors–உங்கள் வாட்டபம் வேலைசெய்யவில்லையா? நீர் இறைக்கவில்லையா? சேவிஸ் செய்யவேண்டுமா? நாங்களே வந்து கழட்டித்திருத்தி உடன் நீர்இறைக்கச் செய்வோம். Omega, Manipay Road, Jaffna. சி-2013

"கார்த்திகை காய்" மீண்டும் சேகரம் செய்கின்றோம். கதிரேசன் அன் கம்பனி, 28, குமார வீதி, கொழும்பு 11. சி-1858

Typewriters — தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் விற்கவும் Fudo Enterprises, 39/17, Power House Road, 3-rd Lane, Jaffna. C-2011

## பயிற்சி

ரெலிவிசன் வீடியோ டெக்நிப்பியறிங் Computer Programming (Basic) வயறிங், றீவைண்டிங், Diploma in Draughtsmanship சனி, ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பம், 06 02-88 விபரங்களுக்கு: Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். [சி 1998]

## வகுப்புக்கள்

Radio T V, Air conditioning-Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வைன்டிங், பிளம்பிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன. சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகள் அளிக்கப்படும். பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering, Aid Hall (ஆனைப்பந்திச் சந்திக்கருகாமையில்). 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் சி-1970

Computer Programming கம்பியூட்டர் கல்வி, ஆரம்பம்: 5 2-88 பயிற்சிக் காலம் 2 மாதம், கட்டணம் 750/- (பகுதி பகுதியாகச் செலுத்தலாம்) O/L படித்த இருபாலாரும் சேரலாம். சான்றிதழ் வழங்கப்படும். Unikco Computer Centre No 5, மின்சார நிலைய வீதி, 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (உபதபாற்கந்தோர் அருகாமை) சி-1985

## தவறிவிட்டது

திருமதி K நடராஜா என்பவருக்குச்சொந்தமான தேசிய அடையாளஅட்டை இல 367-002670V, மக்கள் வங்கி காசோலைபுத்தகம், இல 51120 வர்த்தகவங்கிபுத்தகம் இல 62-59 Draft முதலியஆவணங்கள் போர்சுடன் 1-2-88 தவறிவிட்டது. இதைக்கண்டெடுத்தவர்கள் திருமதி K நடராஜா சாமுவேல் சன்ஸ் லேன், செம்மணி றோட், முத்திரைச் சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம்வழங்கப்படும் சி-2044

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து கொண்டிருந்த 28ஸ்ரீ7785 இலக்கலொறி தாரகா மாங்குளத்துக்கு அருகில் ஒல்லிக்குளம்என்னுமிடத்தில் கடத்தப்பட்டுலொறியில் அனுப்பப்பட்ட2சூட்கேஸுகள் காணுமற் போய்விட்டன இந்த சூட்கேஸுக்குள்முக்கியமான தஸ்தாவேஜுகளுடன் பொருள்களும் இருந்தன. 2 சூட்கேஸுகளையும்தவறி எடுத்தவர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு ஒபபடைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும் எஸ் யோகராசா, 186/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் சி-2049

## அறிவித்தல்
### வெற்றுச்சாக்கு கேள்வி கோரல்

எமது சங்கத்தில் 5000 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கு உள்ளன. சங்கத்திஞல் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்து 10-02-88 நண்பகல் 12-00 மணிக்கு முன்னர், அரக்கு முத்திரையிடப்பட்ட பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்,

**பொதுமுகாமையாளர்,**
மானிப்பாய் கோவில் பற்று பல. நோ கூ. சங்கம்,
மானிப்பாய்.

(எ 2507)

## யாழ். பல்கலைக்கழகம்— இலங்கை
### மாணவர் வதிவிடம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருப்பதற்கு வீடுகள்/அறைகள் தேவைப்படுகின்றன

யாழ்ப்பாணம், கொக்குவில், திருநெல்வேலி நல்லூர் ஆகிய பகுதிகளில் வீடுகள் உடையவர்கள் வீட்டினை / வீட்டின் ஒரு பகுதியினை / அறையினை, வாடகைக்கு / குத்தகைக்குக் கொடுக்கவிரும்பினுல் பல்கலைக்கழக மாணவர் நலச்சேவைகள் கிளை சிரேஷ்ட உதவிப்பதிவாளரைச் சந்திக்கவும். அத்துடன் அவரிடம் இதற்கென வுள்ள படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பங்களை அவரிடம் கொடுக்கவும்.

**பதிவாளர்.**

(எ 2504)

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மகாபொல புலமைப்பரிசில் அறிவித்தல்

புதிதாக யாழ். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு மகாபொல புலமைப்பரிசில் பெறுவதற்காக மிரிகாமத்திற்குச் செல்ல வேண்டிய மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (05 - 02 - 1988) யாழ். பல்கலைக்கழகத்தில் காலை 10-30 மணிக்கு வந்து சேருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்,
(யாழ். பல்கலைக்கழகம்)
ஏ-2503

## புங்குடுதீவு-நயினுதீவு பல நோ. கூ. சங்கம்
### வெற்றுச்சாக்கு விற்பனை

எம்மிடம் 4108 வெற்றுச் சாக்குகள் வரை கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யவிருக்கின்றது. விண்ணப்பப் பத்திரததிற்கு ரூபா 5/-ம், வைப்புப்பணமாக ரூபா 250/-ம் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்று 15-02 88 திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம்

பொதுமுகாமையாளர்,
புங் நயி. ப நோ கூ. சங்கம்,
புங்குடுதீவு.

என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும் என்வலப்பின் இடதுபக்க மூலையில் "கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**சாக்குவிபரம் வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| 67 | கிலோ | மாவு | 184 |
| 55 | ,, | ,, | 401 |
| 67 | ,, | அரிசி | 771 |
| 100 | ,, | ,, | 1307 |
| 50 | ,, | ,, | 298 |
| 50 | ,, | சீனி | 229 |
| நவதானியம் | | | 28 |
| கழிவு | | | 421 |
| துண்டு | | | 50 |
| பாக் | | | 419 |
| | | | .... ... |
| | | | 4108 |

**பொது முகாமையாளர்,**
புங்-நயி. ப. நோ. கூ. சங்கம்
(எ 2505)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

The Service of Installation
of
Dr. ELIATHAMBY SEEVARATNAM THEVASAGAYAM
as Principal of
St. JOHN'S COLLEGE, JAFFNA
by
THE RIGHT REVEREND JABEZ JEBASIR GNANAPRAGASAM
Bishop of Colombo
will take place at
St. John the Baptist Church, Chundikuli
on
FRIDAY the 5th FEBRUARY, 1988 at 3.00 p m.
(A-?043)

## Science Academy
(B M C. க்கு முன்பாக)

Sat Sunday Class ஆரம்பம் 06 - 02 - 88

BOTANY — பாலா
GENETICS — 8 - 30
PHYSICS — மணியம்
வெப்பவியல் — 10 - 30
ஒட்டமின்னியல் — 11 - 30

**Day Class** புதிய பகுதிகள் ஆரம்பம்

ஒட்டமின்னியல் — மணியம்
பௌதீகஇரசாயனம் — ரஞ்சன்
நிலைமின்னியல் — மணியம்
சூழலியல் — குணசீலன்
APPLIED / PURE } பிரேம்நாத்

எ-2506

## வெற்றிடங்கள் (Vacancy)
### யாழ் மெடி கிளினிக் & பார்மசி
(நல்லூர்)
### Yarl Medi - Clinic & Pharmacy
(Nallur)

மேலும் பார்மசியில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகளும், பார்மசியில் பயிற்சி பெறவிரும்பும் பெண்பிள்ளைகளும் 07-02-1988 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில்வரவும்.
[முன்னர் விண்ணப்பித்தவர்களும் சமூகம் தரலாம்]

**யாழ் மெடி கிளினிக் அன் பார்மசி**
966, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, நல்லூர்.

(இந் நிறுவனம் இன்று 05-02-1988 பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைகழக பதில் உபவேந்தரும், மருத்துவ பீடத் தலைவருமான Dr. செ சிவஞானசுந்தரம் நந்தி) அவர்களால் சம்பிரதாய முறைப்படி திறந்துவைக்கப்படுகின்றது) சி-2041

## பல்கலைக்கழக (வெளிநிலை) விரிவுரைகள்
### கல்வியாண்டு 1988/89

பேராதனை, ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான:

★ கலைமாணி- B. A.
★ விஞ்ஞானமாணி(புள்ளி விபரவியல்) B. Sc.
★ வணிகமாணி- B. Com.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும் விண்ணப்படிவத்தினையும் 10/- செலுத்தி நேரில் / தபால்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**விரிவுரைகள் 6-2-88-ல் ஆரம்பமாகின்றன.**

உதவிப்பதிவாளர்,
**பட்டப்படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

- பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விரிவுரைகளை வழங்கும், ஒரேயொரு நிறுவனம் யாழ். நகரில் இதுவே.
- கடந்த 10 ஆண்டுகளாக பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம். (ஏ 2036)

யாழ். மாவட்டத்திற்கு

# இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் கடமையாற்றி தற்போது யாழ் மாவட்ட பாடசாலைகளிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் விபரம் வருமாறு;

திருமதி கே இராசரத்தினம், (அளவெட்டி அருணோதயா), திருமதி. ரி. பாலேந்திரன், (அரியாலை ஸ்ரீ பார்வதி திருமதி கே ஸ்ரீ இராசசேந்திரன் (யாழ் கன்னியர் மடம்). திரு எஸ். சிவகுருநாதன் (நல்லியங்காடு இ த க.), திருமதி ஆர். பஞ்சலிங்கம் (யாழ் கன்னியர் மடம்) திருமதி வி. ஸ்ரீஸ்கந்தராஜா, (சுழிபுரம் ஐக்கிய சங்கம), செல்வி பி கனகரத்தினம் (இணுவில் சைவப்பிரகாச), செல்வி ரி. நவரட்னம் (மானிப்பாய் மகளிர்), திரு. எஸ் விநாயகமூர்த்தி (உடுப்பிட்டி அ மி.வி) திருமதி கே. குமாரசாமி (நல்லூர் ஸ்தான சி சி த. பா) திருமதி பி. வேலாயுதபிள்ளை (வசாவிளான் ம. வி.) திரு ஏ கணேசமூர்த்தி [யாழ். சென்யேம்ஸ் ம. வி, செல்வி கே நடராஜா (இளவாலை கன்னியர் மடம்), திரு.ஆர். சிவநாதன் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் செல்வி. ஐ தம்பையா (வட இந்து மகளிர் வி), செல்வி ஏ. அந்தோனிப்பிள்ளை (கிறிஸ்தவக் கல்லூரி கோப்பாய்) செல்வன் எஸ். சிவசுப்பிரமணியம் (சுட்டிபுலம் ம வி). செல்வி எஸ். தம்பித்துரை (இணுவில் சைவப்பிரகாசா வி), திருமதி. எஸ் நளினி வேப்படி மகளிர்),

செல்வி ரி நிர்மலாதேவி (நல்லூர் கா சிப்பிள்ளை), திரு வீ. இராஜசூரியர் (யாழ். சென் யேம்ஸ்), செல்வி ஜி. ரி எஸ் கிரிஸ்ரியன், திரு. எஸ் ஞானேஸ்வரன், (யாழ் இந்து ஆரம்ப பாடசாலை) திருமதி எஸ் ஞானேஸ்வரன் (யாழ் இந்துமகளிர்), திருமதி சி. என். சன்முகநாதன் (விக்ரோறியா க ), திரு கே. தேவேந்திரன் யாழ் வைத்தீஸ்வரா], திரு பி ஜோசப் நாயகம் (புனித அந்தோனியார் பாசையூர்), திரு எஸ் பி பி தருமேந்திரராஜன் [விக்னேஸ்வரா க. கரவெட்டி செல்வி என் ஆறுமுகம் [தோப்புக்காடு மறை ஞான சபபந்தர்] திரு. சி. பஞ்சநாதன் [பண்ணாகம் மெய்கண்டான்] சிஸ்ரர் எம். ஜேரோம் [சென் பொஸ்கோ] திருமதி ஜி பி ஜெயராஜா யாழ். தருக்குடும்ப கன்னியர்மடம்), திரு எஸ பாலச்சந்திரன் [யாழ்.நாவாந்துறைறோ.க. வி), செல்வி யே. செல்லத்துரை [கந்தரோடை தமிழ் வி], திரு. ரி வீரசிங்கம் சண்டிலிப்பாய் இ ம வி], திரு. பி. ஆரூரன் [சேர் வை துரைச்சாமி வேலணை]. திரு. என். இரத்தினேஸ்வரன் [கொழும்புத்துறை துரையப்பா], செல்வி. கே தயாநிதி, [வேலணை சரஸ்வதி] திரு ஏ நகுலேந்திரா [புனித அந்தோனி பாசையூர்], செல்வி ரி. கனகசபை [பண்டத்தரிப்பு இ்த], திரு ஆர். விஜயகுமார் [நவாலி அட்டகிரி வி.], செல்வி கே. சுந்தரம் [உரும்பிராய் இந்து]

திருமதி எஸ் சிவசுப்பிரமணியம் [குப்பிளான் விக்னேஸ்வரா], திரு. ஆர் மதியளகன் [நாவாந்துறைறோ.க.வி.] திரு. கே எஸ் பாலசுப்பிரமணியம் [கைதடி விக்னேஸ்வரா], திரு ஏ சிவலிங்கம் [கொழும்புத்துறை இந்து ம. வி.], திரு.என் இராசரத்தினம் [இளவாலை மெய்கண்டான்], தருமதி யே யே நிக்கிலஸ் [உசன் இராமநாதன் வி], திரு கே ஜெயபாலசிங்கம் [கரணவாய் தெற்கு விநாயகர்], திருமதி ஏ ஜெயபாலசிங்கம் [மெதடிஸ் த.க. பா. நெல்லியடி], திரு எஸ் புண்ணியமூர்த்தி வட்டு இந்து], திரு எஸ். சிவபாதசுந்தரம் [உயர புலம் மெமி த.] திரு. வி குமரகுரு [கோண்டாவில் பரஞ்சோதி], திரு. என். நகுலநாதன் [ஊர்காற்றுறை புனித அந்தோனியார்], திரு எம். ஜெயவரதராஜா [இருதயக்கல்லூரி கரவெட்டி], செல்வி எஸ் சிவப்பிரகாசம் வட இந்துமகளிர்]. செல்வி எஸ் முருகேசு [உசன் இராமநாதன்], செல்வி ஆர் சாந்தநாயகி [நாவற்குழி ம வி.], திரு. கே. சோமசுந்தரம் [சாவகச்சேரி இந்து]. திரு கே சிவபாதம் [ஸ்கந்த வரோதயா], செல்வி எஸ் செல்லத்துரை அருணோதயா], திரு எஸ் சந்திரன் [கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி], திரு கே. சிவபாலரட்ணம் [அத்தியார் இந்து], செல்வி பு நவரெட்ணம் [சண்டிலிப்பாய் வடக்கு அ த.க], திரு ஏ. ஜெகநாதன் [வேலாயுதம் ஆண்கள் பாடசாலை], செல்வி எஸ நடராசா [ஹாட்லிக் கல்லூரி], செல்வி எம்.யே ஏ. த பிநாயகம் [இளவாலை கன்னியர்மடம்]. சஸ்ரர், மேரி ஏசி. இனிசியா [சென்திரேசா ம. வி அச்சுவேலி], திரு. எஸ். கணேசமூர்த்தி [ஸ்கந்த வரோதய], செல்வி ஏ. பாலசுபபிரமணியம் [அத்தியர் இந்து], திரு கே. கிருஷ்ண பிள்ளை [வட்டு திருஞானசம்பந்தர்] திருமதி கே. கணேசமூர்த்தி [உயரப்புலம் குணபாலன்], செல்வி கே. வைரமுத்து [மாதகல் சென்யோசப்] திருமதி வி. சிவயோகநாதன் [மகாஜனா], திருமதி ஜி கே நடராசா [சென் மேரிஸ் ம.வி. ஊர்காவற்றுறை], திருமதி பி ஆறுமுகம் [இணுவில் அ மி த க].

## வியாழ மாற்றத்தின் பொதுப்பலன்

பிரபவ வருடம் தை மாதம் 16-ம் நாள் சனிக்கிழமை (30-01-1988) வியாழ பகவான் மீன இராசியில் இருந்து மேட இராசிக்குப் பிரவேசித்தார்.

இலங்கையின் இராசி துலாம் சென்ற ஆண்டு மீன இராசியான துலாத்திற்கு 6ம்வீட்டில் வியாழ பகவான் இருந்தபோது வடமராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் வடமராட்சிப்பகுதியில் பாரிய உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஏற்பட்டு மக்கள் அகதிகளாயினர்.

எனினும் வியாழ பகவான் ஜூலை 16ம் திகதி அதிசீக்கிரமதியில் மேட இராசிக்குப் பிரவேசித்ததால், அம்முயற்சிக்கு இடர்பாடு ஏற்பட்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாகி நாட்டில் அமைதி நிலவியது.

ஆனால் வியாழபகவான் மீண்டும் அதிசீக்கிர வக்கிர கதியில் மீன இராசிக்குத்திரும்பிச் சென்றதால் நிலவிய அமைதிக்கு குந்தகம் ஏற்பட்டதுடன் வடமராட்சி தவிர்ந்த ஏனைய தமிழ்ப் பிரதேசங்களில் பாதிப்பு ஏற்பட்டன

எனவே சென்ற ஆண்டு ஏற்பட்ட இத்தகைய அனர்த்தங்களுக்கு காரணம் நடைபெற்ற ஏழரைச் சனியும், வியாழ பகவானின் தாக்கமுமே. இருந்தும் மூன்றுமாத காலம் ஒரு குறுகிய கால அமைதியை வியாழ பகவான் மேட இராசியில் இருந்து ஏற்படுத்தினார் அந்த மேட இராசிக்கே 30-1 1988ல் வியாழ பகவான் பிரவேசித்திருப்பதால் இந்த ஆண்டு இலங்கை அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் ஒரு சமூகநிலை ஏற்படும் என நம்பலாம்.

13-2-1988ல் சனீஸ்வரன் விருச்சிக இராசியில் இருந்து தனு இராசிக்குப் பிரவேசிப்பதனால் 1979 முதல் இலங்கை அரசுக்கு இருந்துவந்த ஏழரைச் சனி அத்துடன் நீங்குகின்றது. அதேசமயம் தமிழினத்திற்கு ஏழரைச் சனியின் நடுக்கூறு ஆரம்பமாகின்றது என்பதையும் சற்று உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். இவற்றின் விளைவால் 1988ம் ஆண்டுமுதல்இதுவரை இருந்து வந்த பூசல்கள், பிணக்குகள், கலவரங்கள் என்பன அகன்று அமைதி நிலவும். தமிழ் இளைஞர்கள் மத்தியில் கல்வி முன்னேற்றம், கூடுதல் வேலைவாய்ப்புக்கள் என்பன ஏற்படும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளால் பெருமையடைவர். தமிழ் மக்களது பொருளாதார முன்னேற்றம் சிறப்படையும். இதுவரை தீர்க்கப்படாது இருந்துவந்த இனப்பிரச்னைக்குத் தீர்வு உண்டாகும். தமிழ் மக்கள் நியாயபூர்வமாக எதிர்பார்த்ததைவிட சற்றும் கூடுதலான உரிமைகள் கிடைக்கும் இத்தகையதன்மைகளை வியாழ பகவானின் கோசர பலன் வழங்குமெனினும் ஏழரைச் சனியின் தாக்கத்தால் இலங்கை அரசின் கை ஓங்கி நிற்கும்.

1989ம் ஆண்டு வியாழபகவான தமிழினத்துக்கு 6ம் இடத்தில் 7 1/2 சனியன் நடுக்கூறும் சேர்ந்து நடக்கும் போது பெரும் பாதிப்புக்களுக்கு இடம் உண்டு. இக்காலத்தில் தமிழ் மக்கள் மிக அவதானமாக செயல்பட வேண்டும்.

— கற்கோவளன்

## புங்குடுதீவில் புதுவித காய்ச்சல்

[புங்குடுதீவு]

கடந்த சில நாட்களாகப் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் புதுவிதக் காய்ச்சல் [illegible] அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## காலமானார்

(கோலாலம்பூர்)

தமிழ்த் தட்டச்சைக் கண்டுபிடித்த இரா. முத்தையாவின பாரியார் சிவசோதியம்மை அண்மையில் மலேசியாவில் காலமானார். இவர் சுவாமி டாக்டர் சத்தியானந்தாவின் சிறிய தாயாரும், நூலசர் கா. மாணிக்கவாசகரின மாமியுமாவார்.

## மீண்டும் இலவச வகுப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கல்வி சமூக அபிவிருத்திக் கழகம் முன்னர் நடத்திவந்த மாணவர்களுக்கான இலவச வகுப்புக்கள் இம்மாதம 27 ம் திகதி முதல் ஆரம்பமாகவிருக்கின்றன. கழகத்தில் தலைவர் திரு அ தங்கராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிர்வாகத்தின் நிர்வாகக் கமிட்டி கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

## அகதிகள் புனர்வாழ்வு: பிரஜைகள்குழு ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வுபற்றி ஆலோசனை செய்வதற்காக வடக்கு கிழக்கு பிரஜைகள் குழு இணைப்புக் குழுவின் விசேட பொதுக்கூட்டம் அவசரமாக கூட்டப்படுகிறது

நல்லூர் இந்துவிடுதியில் 7ம் திகதி ஞாயிறு கிழமை காலை 10 மணிக்கு இப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

பாதிக்கப்பட்ட அகதிகள் நிவாரண ஏறபாடுகள், மீண்டும் குடியமர்த்தல் போன்ற விடயங்கள் பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை, வவனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சிபகுதி பிரஜைகள் கிழு பிரதிநிதிகளையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரஜைகள் குழு இணைப்புக் குழு இணைப்பு செயலாளர் திரு த சிவானந்தராசா வேண்டிக்கொள்விடுத்துள்ளார்.

## வாழ்க்கைச் செலவுப்புள்ளி ஜன: 714 3

(கொழும்பு)

ஜனவரி மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 714.3 என்று புள்ளிமதிப்பீட்டு திணைக்களத்தின் அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அன்பும் கண்ணப்பரும்




எமக்கு இனியவர் தொடர்புடையோர்கடத்து எமக்கு ஏற்படும் உள்ள நெகிழ்ச்சியே அன்பாகும். அன்பினால் அவர்களின் நன்மையில் மகிழ்ச்சியும் அவர்களின் துன்பத்துக்கு உதவும் ஊக்கமும் ஏற்படுகின்றது நம்போன்ற சாதாரண நிலையிலிருந்து சிறிது உயர்ந்தநிலை ஏற்பட்டவர்கள் எல்லோரும் இன்புறுவதில் இன்புறுபவராயும் மனிதன் அனைவரதும் நன்மைகளுக்கு முயல்பவராயும் இருப்பர். இவர்கள் எல்லோருக்கும் பயன்படும சமூகத் தொண்டுகளில் ஈடுபட்டு இன்புறுவதுடன் தூயபுகழ் அடைவதனையும் கவனித்தால். நாமும் இவர்களைப் போன்ற மேல்நிலையை அடைவதற்கு முயலலாம்.

எல்லோருக்கும் பயனும் இன்பமும்கிடைக்க வாழவேண்டும் எல்லாருக்கும் செலவும்சிரமமும் இன்றிச் செய்யக்கூடிய பணிகள் பொதுஇடங்கள் பொது நீர் நிலைகளைத் துப்புரவுசெய்வதும் தனிப்பட்ட இடங்களிலும் பொது இடங்களிலும் பயன் தரும் மரங்களை நட்டுவளர்த்தலுமாகும்.

இப்படியான பணிகளால் நம் மனத் தூய்மை பெருகும் போதுதான பரமகருணாநிதியாகிய சிவபெருமானிடத்தில் உண்மையான தூயபக்தி உண்டாகும்.

உலக நலன்களை வேண்டும் கடவுள் நம்பிக்கு மேலானதும் பெருமையுடையதுமான தூய பக்தி ஒருவனுக்கு ஏற்படும்அப்போதுதான் கண்ணப்பநாயனாரின் அன்பின் முதிர்ச்சியை உணரமுடியும்

பக்தி உலகிலேயே உன்னதமான நிலையில் விளங்கும் கண்ணப்பர் அன்பு முதிர்ச்சியினால் இறைவனுக்குத் தன்கண்களை இடந்து அப்பினார் கண்ணப்பருக்குச் சிவபெருமானிடத்தில் இருந்தது போன்ற அன்பு தனக்கு [illegible] என்று ஆசைப்பட்டார் மாணிக்கவாசகர்.

கண்ணப்பரின் பக்தியின் எல்லையை விரும்பவும் சிவபெருமானே அன்புமயமாய் இருக்கும் தன்மையை உணரவும் [illegible] எல்லையை விரிவடையச் செய்ய வேண்டும். அன்பைப்பெருக்கி எம் உருயிரைக் காக்கும் சிவபெருமானின் திருவருள் வழிப்படவேண்டும்.

கண்ணப்பரைவழிபடுவதோடு அன்பைப் பெருக்க ஆரம்பிப்போம்.

என்புருகி நெஞ்சம் இளகிக்
கரைந்துகரைந்து
அன்புருவாய் நிற்க
அலந்தேன் பராபரமே.
—தாயுமானவர்

'அருணாசலம்'

LONDON EXAMS
(May/June 88, Exams.)
நாளை ஆரம்பம்
I. C. M. A. - Stage I
A. A. T. Prelim

விரிவுரையாளர் குழு: V. கருணாநிதி. S.P சிவஞானம் S. சிவபாலன். மற்றும் பிரபல பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

குறிப்பு: குறுகிய காலத்தில், கூடிய மணித்தியாலங்கள், எடுத்து பாடத்திட்டத்தை முடித்து, கடந்த கால வினாக்களுக்கு விடைகளும் அளிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
RAPID RESULTS INSTITUTE
212, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
எ-2503

# ஒரு நல்ல பணிக்கு கைகொடுப்போம்

1926ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம் இன்று ஒரு புதிய அத்தியாயத்தில் அடி எடுத்து வைத்திருக்கிறது.

முன்னொரு காலத்தில் இருநூறுக்கு மேற்பட்ட அனாதைச் சிறுவர் சிறுமியருக்கு புகலிடம் அளித்த அனாதை இல்லம் இன்று நூறுக்கும் சற்று அதிகமான தொகையினரையே வதிவோராக கொண்டிருக்கிறது. இது மட்டுமல்ல யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காக கல்லூரிகள் பல சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கத்தால் நிறுவப்பெற்று சிறப்பாக நிர்வகிக்கப்பெற்று வந்த வேளையில் 1963ம் ஆண்டு அரசு கல்லூரிகளை கையேற்றத்தால் சங்கத்தின் மேற்பார்வையிலிருந்து அவை நழுவ நேர்ந்தது. அதன் பின் "இந்துபோர்ட்" [திரு] இராஜரத்தினம் அவர்களது மறைவுக்கும் பின்னர் இந்தச் சங்கத்தின் பணிகள் அதன் நிர்வாக இயக்குனர் திரு. எஸ். ஆர். கனகநாயகத்தின் தலைமையில் இயங்கியது.

**புஷ்பா செல்வநாயகம்**

சைவர்களுக்கென்று இருக்கும் ஸ்தாபனங்கள் மிக மிகச் சிலவே அதிலும் வெளிநாட்டு நிதியங்களின் உதவியோடு இயங்கும் ஏனைய மத அனாதை இல்லங்களோடு ஒப்பிடும் போது நமது நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. இத்தருணத்தில் சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கத்தின் பணிகள் ஏற்று புத்துயிரூம், ஊக்கமும் கொடுக்க வேண்டும் என்று சில பரோபகார சிந்தையுடைய சைவர்கள் முன்வந்துள்ளமை பெருமை தருகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த அசம்பாவிதங்களால் பாதிப்புற்ற மக்களது இன்னல்களை கருத்திற்கொண்டு பாதிப்புற்ற அனாதை சிறுவர் சிறுமிகளது விபரங்களை சேகரித்த அவற்றினடிப்படையில் அனாதை இல்லத்தில் வதியும் சிறுவர்களின் தொகையை நாலூறாக அதிகரித்தல், பல்வேறு உலக ஸ்தாபனங்களின் உதவியோடு நிதிதிரட்டி பல புதிய அனாதை இல்லங்களை ஸ்தாபித்தல், சமூகச்சேவையாளரைத் திரட்டல் பல்வேறு தொழில் திட்டங்களை ஆரம்பித்தல் என பணிகளை விஸ்தரிப்பதற்கு கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. மேலும் சைவ ஆலயங்களை புனரமைத்தல் சேதமடைந்த கோவில்களுக்கு உதவுதல் ஆகியவற்றுடன் மக்களுடைய ஒழுக்கம். சமூக சேவைகள் முதலியவற்றில் சிரத்தைகொண்டு அவற்றை வளர்க்கவும் நெறிப்படுத்தவும் இச்சபைத் திட்டங்கள் பலவகுத்துள்ளன.

காலத்திற்குக் காலம்பொது மக்களுடன் தொடர்பு கொண்டு கூட்டங்கள் கருத்தரங்குகள் முதலியவற்றை ஏற்பாடுசெய்து மக்களுடன் நெருங்கிய நட்புறவையும் சகோதர உணர்வையும் மனித நேயத்தையும் பேணிவளர்ப்பதற்கு சைவவித்தியா அபிவிருத்திச் சங்கம் பலநல் முயற்சிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கான பணிகள் சைவச் சிறுவர் நிறைவாழ்வுக் கட்டிடத்தில் அமைக்கப்பெற்றுள்ள காரியாலயத்தில் நடைபெறுகின்றன என்பதையும் தொடர்புகொள்ள விரும்புவோர் கலாசாலை வீதியில் திருநெல்வேலி வடக்கில் சங்கத்துடன் இருவாரகால எல்லையின் பின் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

## இன்றைய பலன்

மாதம்; 22 [1988-2-5]
கிழமை: வெள்ளி
திதி; துதியை காலை 7-17ன் மேல் திருதியை
நக்ஷத்திரம்: பூரம்

மேடம்: புதிய பொருளைக் கொள்வனவு செய்ய இன்று நலம். வெளியிடத்துத்தொடர்பும் உண்டு. பிதாவழியால் மனக் கவலையும் உண்டு.

இடபம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள். சிலருக்கு நன்மையான இடமாற்றமும் ஏற்படலாம்.

மிதுனம்: எதிர் பாராத பொருள் வரவும் பொதுசன மதிப்பும் இன்று கிடைக்கலாம் நன்மையான காரியங்களும் உண்டு.

கடகம்: எதிலும்தடுமாற்ற நிலை ஏற்படும் குசுகுசுப் பேச்சுக்கள் மூலம் அவதூறுகள் உருவாகலாம். வியாபாரத் துறையில் மந்தநிலை காணப்படலாம்.

சிங்கம்: விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழிவகுக்கும் ஆணவத்தை அடக்கவும் அரசியல்வாதிகள் அடிசறுக்க நேரிடும்.

கன்னி: வீட்டில் சுபகருமங்களுக்கும் இடமுண்டு. பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர் கைத்தொழில் விருத்தியும் உண்டு.

துலாம்: அமைதிக்குக் குப்பங்கம் ஏற்படும். நெருங்கிய ஒருவரின் உடல் நலம் பாதிக்கப்படலாம் குறை கேட்கவும் நேரிடலாம்.

விருச்சிகம்: கல்வித்துறையில் உற்சாகம் பிறக்கும். பொருளாதார நிலை குன்றும். வாகனச் சாரதிகள் அவதானம். வேண்டும்.

தனுசு; புதிய வழிகளில் பொருள்வரவு உண்டு. புத்திர வழியாலும் புகழ் பரவும். தொழிலும் மந்த நிலை காணப்படும்.

மகரம்; வழக்கு விவகாரங்களும் ஏற்படும். வீண்தசலவுக்கும் இடமுண்டு.

கும்பம்: கட்டிவெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை. பசுமையான எண்ணங்கள் அலைமோதும். களஸ்திர சுகமும் உண்டு.

மீனம், கடன் தொல்லை அதிகரிக்கும். குடும்பப் பிளவுகள் ஏற்படும். நிதானம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்



## அமரர் சம்பந்தர்

சிறந்த சமூகத்தொண்டராகவும் திறமை மிக்க நிருவாகியாகவும், பண்பு மிக்க நண்பராகவும் விளங்கிய கனகசபை திருஞானசம்பந்தர் கொழும்புத்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற கர்தையா கனகசபை [கிளாக்கர்] மங்கையர்க்கரசி தம்பதிகளின துசிரேஷ்ட புத்திரராவார். அனுராதபுரம் சூசையப்பர் கல்லூரி சம்பத்தரிசியார்கல்லூரியாழ்.மத்திய கல்லூரி, ஆகியவற்றில் கல்வி பயின்று யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக அரசின சாரணர் (King's Scout) விருது பெற்றவர் இவர்.

1948ல் உணவு உற்பத்தி உத்தியோகத்தராக நியமனம் பெற்றுப் பின்னர் குடியேற்ற உத்தியோகத்தராக மட்டக்களப்பு, கந்தளாய், புத்தளம் கிளிநொச்சி போன்ற இடங்களில் சேவையாற்றி பாவட்டகாணி அதிகாரியாகவும் உதவிக்காணி ஆணையாளராகவும் பதவியுயர்வு பெற்றுபுத்தளம், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றி 1983ல் ஒய்வுபெற்றார்.

சிறந்த தெய்வபக்தராக விளங்கிய இவர் ஈழத்தில் தரிசிக்காத பிரபல்யமான சைவத்தலங்கள் எதுவுமே இல்லை. தான் சேவை ஆற்றிய இடங்களில் எல்லாம் கோவில் நிர்மாணம் திருப்பணித் தொண்டுகளில் முன்னின்று உழைத்தவர். கொழும்புத்துறை வதிரிபீட விநாயகர் ஆலய பரிபாலனக் குழுவின் தலைவராக காலமாகும் வரை கடமையாற்றினார். ஒய்வு பெற்ற பின்னரும் அவரது தொண்டுகள் தொடர்ந்தன. சர்வோதய யாழ். கிளைத்தாபனத்தில் கடந்த ஆண்டு கடமையாற்றும் வாய்ப்பு கிடைத்தது. 8-11-87ல நிகழ்ந்த இவரது அகால மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். 90-வது நாள் பிரார்த்தனைகள் அவரது வண்ணார்பண்ணை இல்லத்தில் இன்றைய தினத்தில் நடைபெறும்.

- ஓர் அன்பர்.

## சீமெந்து விநியோகம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஓரளவு இயங்க ஆரம்பித்துள்ளதால் பொது மக்களுக்கான சீமெந்து விநியோகம் விரைவில் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கேசன்துறை சீமெந்து ஆலை கடந்த 3 மாதமாக மூடப்பட்டு கடந்த 20ம் திகதி மீண்டும் திறக்கப்பட்டு திருத்த வேலைகளும் பராமரிப்பு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆரம்பத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குறிப்பிட்ட அளவு சீமெந்து விநியோகம் இடம்பெறுமெனவும், தொழிற்சாலை சீராக இயங்க ஆரம்பித்து போதியளவு சீமெந்து உற்பத்தி செய்யப்படும்போது சீமெந்து விநியோகமும் தடையின்றி இடம்பெறுமெனவும் கூறப்படுகிறது.

## பிரதான வீதி திறக்கப்பட்டது

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பிரதான வீதி கடந்த ஞாயிறு தொடக்கம் மக்கள் போக்குவரத்திற்கு திறந்துவிடப்பட்டுள்ளது.

கடந்த மூன்றுமாத காலமாக இவ் வீதிக்கு அண்மையிலுள்ள வயல் பாதை வழியாகவே மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். மழைக்காலங்களில் மக்கள் இதனால் பெரும் போக்குவரத்துக் கஷ்டத்தை அனுபவித்து வந்தது குறிப்பிடத்தக்கது

இதேவேளை பிரதான வீதியில் இதுவரை திறக்கப்படாதிருந்த சில கடைகளும் இவ் வாரம் திறக்கப்பட்டுள்ளன

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

புங்கன்குளத்திலுள்ள அரியாலை சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகசபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்; திரு. எஸ். கணநாதன், பொதுச்செயலாளர்; திரு. ரீ. கேதீஸ்வரநாதன், பொருளாளர்: திரு. கோ. விக்கினேஸ்வரம். மற்றும் 18 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## தடுப்பு ஊசி விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு, சங்கானை, வட்டுக்கோட்டை ஆகிய அரசினர் வைத்தியசாலைகளுக்கு நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் குழந்தைப்பிள்ளைகளுக்கான அம்மைநோய் தடுப்பு ஊசி மருந்துகளும், போலியோ தடுப்பு மருந்துகளும் சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

## ஆதின முதல்வர் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

"இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் கொக்குவில் சிவா பிறின்ரேஸ் ஸ்தாபனத்தார் அஷ்டலஷ்மி தினக்காள் கலண்டரை வெளியிடுவது போற்றக்கூடிய சிறந்த பணியாகும் பொது அறிவைத் தந்து ஆத்மீக கருத்துக்களையும் பரப்ப முன்வந்திருப்பதை மனமாரப் பாராட்டுகிறோம்' என்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற அஷ்டலக்ஷமி கலண்டர் வெளியீட்டுவிழாவில் ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா தமது சிறப்புரையில்;

"யாழ்ப்பாண மண்ணில் புதிய தொழில்கள் உருவாக்கப்படவேண்டும். இலை மறை காயாகவுள்ள படைப்பாளர்களைப் போற்றி நாம் ஆதரிக்க வேண்டும். இத் தினக்காள் கலண்டர் தமிழ் சமுதாயத்திற்குப் புதிய உற்சாகத்தையும் நல்லறிவையும் தரும் என்ற நம்பிக்கை எமக்குண்டு அதன் மூலகர்த்தாவாகிய திரு. ஆறுமுகம் கந்தையாவின் பணியை மனமாரப் பாராட்டுகிறோம்" எனக்குறிப்பிட்டார்.

வித்துவான் க. கணபதிப்பிள்ளை வெளியிட்டு வைத்த பாடலையில் இத் தினக்காள் கலண்டர் தமிழ் சமுதாயத்திற்குப் புதிய தெம்பையும் போதனைகளையும் தந்துள்ளது எனக் குறிப்பிட்டார். திரு ம. சிவராசா முதல் பிரதியை வாங்கிக் கௌரவித்தார்.

## வைத்தியசாலையில் நாய்கள் தொல்லை

[புங்குடுதீவு]

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளர்கள் அங்குதிரியும் கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் பெரும் சிரமப்பட்டு வருகிறார்கள்.

எனவே இவற்றை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## மீண்டும் இயங்குகிறது

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின உடைமையாகும் நிலையம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த மாதம் இந்த நிலையம் உடைக்கப்பட்டு சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான துணி வகைகள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சார்ஜாவில் மீண்டும் ஒரு கிரிக்கட்

சார்ஜா, பெப் 3

எதிர்வரும் மார்ச் மாதத்தில் சார்ஜாவில் நடைபெறவுள்ள மூன்று நாடுகள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இலங்கை, இந்தியா, நியூசிலாந்து ஆகிய 3 நாடுகளும் கலந்து கொள்கின்றன.

மார்ச் மாதம் 24ம் திகதி முதல் ஏப்ரல் 1ம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தச் சுற்றுப்போட்டியில் சாம்பியன் கிண்ணத்தைச் சுவீகரிக்கும் கோஷ்டிக்கு 30ஆயிரம் டாலரும் 2வது இடம்பெறும் கோஷ்டிக்கு 20 ஆயிரம் டாலரும் 3 வது இடத்தைப்பெறும் கோஷ்டிக்கு 15 ஆயிரம் டாலரும் பரிசாகக் கிடைக்கும்.

## நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

'தமிழ் தந்த தாதாக்கள்' நூல்வெளியீட்டு விழா இம் மாதம் 7ம் திகதி முற்பகல் 9 30 மணிக்கு யாழ் வைதீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல்கலைப் புலவர் திரு.க.சி. குலரத்தினம் எழுதியது சுடரொளி வெளியீட்டுக் கழக செயலாளர் ஐ தி. சம்பந்தன் வெளியிட்டுள்ளார்.

# வடக்கில் மீண்டும் மக்கள் வங்கி கடன் வசதி

[யாழ்ப்பாணம்]

வடபிரதேசத்தில் மக்கள் வங்கிக் கிளைகள் மூலம் மீண்டும் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் திரு. எம். கணேசசுந்தரம் ஈழநாடுக்குத் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கும், மற்றும் வங்கி வாடிக்கையாளர்களுக்கும் நீண்டகால கடன்களை குறைந்த வட்டிக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## பொதுமக்கள் பார்வையிட்டுச் செல்கின்றனர்

[யாழ்ப்பாணம்]

யாழ் போதனா வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவு கட்டிடத்தில் வைக்கப்பட்டுள்ள அண்மையில் அகால மரணமான இருபத்தொரு ஊழியர்களின் நிழல்படங்களையும் பொதுமக்கள் திரளாக வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர்.

கடந்த அக்டோபர் 21ம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் நடந்த அசம்பாவித சம்பவங்களின்போது சுட்டுக்கொல்லப்பட்ட ஊழியர்களின் நிழல் படங்களே மேற்படி கட்டிடத்தில் வைக்கப்பட்டுள்ளது. [ஒ]

## Private Classes

B. M. C. LANE, JAFFNA.

## 88 A/L துரித மீட்டல்

கலை, வர்த்தக வகுப்புக்கள்

**ஆரம்பம்: 06-02-88 சனி காலை 9-30 மணி**

| | | | |
|---|---|---|---|
| சின்னத்தம்பி | — | பொருளியல் | 9-30 காலை |
| யோகராஜா | — | கணக்கியல் | 10-30 ,, |
| சந்திரராஜா | — | அளவையியல் | 11-30 ,, |
| தேவா | — | வர்த்தகமும், நிதியும் | 12-30 ந. ப. |

(சி 2509)



வாடிக்கையாளர்களே!

வியாபாரிகளே!

உங்களின் கவனத்திற்கு:

## மல்ரி-ஒயில் மில் வேலைகள்

## ஆரம்பம்: 05-02-1988

1 நல்ல விலையில் கொப்பரு கொள்வனவு செய்யப்படும்.

2. நன்ருக காய்ந்த தேங்காய்ப் பால் எடுத்த ''பூ''வையும் சேகரித்து பணமாக்குங்கள்.

3. கைவசமுள்ள ''கொப்பரு பூ'' ஆகியவற்றை உடன் கொடுத்து, அதன் பெறுமதியை பெற்றுக்கொள்ளுங்கள்.

4. No 1 தேங்காய் எண்ணெய்க்கு விஜயம் செய்யுங்கள்.

5. குறைந்த சலாரில் எண்ணெய் வடித்து பெற்றுக்கொள்ள வேண்டுமா,

உடன் தொடர்புகொள்ளுங்கள்:

**மல்ரி-ஒயில்**

**இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்,**

(OIL MILLERS)

காங்கேசன்துறை வீதி, இணுவில்.

(இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்புறம்.) (ஏ 2039)


## சைவ வித்தியா

## விருத்திச் சங்கம்

### சைவ ஆலயங்கள்

### புனர்நிர்மாண வேலைத்திட்டம்

நாட்டில் நான்கு வருடமாக இடம்பெற்ற அசம்பாவிதங்களால் சைவ ஆலயங்கள் பல சேதமாக்கப்பட்டுள்ளன. இவற்றின் புனர்நிர்மாணம் தொடர்பாகச் சில முயற்சிகள் தனிப்பட்ட ரீதியில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதுவரையில் அதிக பலன் அளிக்கவில்லை. இப்பணியை ஒரு கூட்டு முயற்சியில் துரிதப்படுத்துவதற்கு எமது சங்கம் தீர்மானித்துள்ளது. ஆலய பரிபாலன சபை, உரிமையாளர்கள், பூசகர்கள் முதலியோரைக் கொண்ட ஒரு கூட்டம் நடாத்திப் பிரச்னைகள் ஆராயப்படும். செயற்குழு ஒன்று தெரியப்பட்டு நிர்மாண ஒழுங்குகளைத் துரிதப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கு உதவியாகப் பின்வரும் விபரங்கள் தேவைப்படுகின்றன:-

1. ஆலயம் - பெயர், விலாசம், அரசாங்க அதிபர் பிரிவு.
2. சேதங்களின் விபரம் - நடைபெற்ற காலம், எவ்வகையான சேதம்?, எக்காரணங்களாற் சேதப்படுத்தப் பட்டது? முதலியன.
3. நித்திய பூசைகள் -தற்பொழுது நடைபெறுகின்றதா? நடாத்துவதிலுள்ள பிரச்னைகள்.
4 ஆலயத்திற்குப் பொறுப்பானவர்கள் / உரிமையாளர்கள்.
5: புனர்நிர்மாணத்திற்கு இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள், செய்யப்பட்ட நிர்மாண வேலைகளும், கிடைத்த உதவிகள் மதிபபீடு தயாரிக்கப்பட்டுளள தாயின் தொகையின் விபரம்.
6, தொடர்பான வேறு விடயங்கள்.

விபரங்கள் சேகரிக்கப்பட்டு நிலைமையைப் பகுப்பாய்வு செய்தபின் கூட்டத்திற்கான திகதி அறிவிக்கப் படும். இதற்கிடையில் இத்திட்டம் தொடர்பாக ஆலோசனைகளும், கருத்துக்களும் தெரிவிக்க விரும்புவோர் கடிதமூலம் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

**செயலாளர்,**

சைவ வித்தியா விருததி சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(சி 2025)

பேருவில் பெரும் மண்சரிவு:

# 30 பேர் பலி, 70 பேரைக் காணவில்லை, வீடுகள், வாகனங்கள் பலத்த சேதம்!

லீமா, பெப்4..

**பேருவில் இடம் பெற்ற பெரும் மண் சரிவொன்றில்30 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் காணுமல் போயுள்ளனர் நூற்றுக் கணக்கான வர்கள் வீடு வாசல் களை இழந்துள்ளனர்.**

நேற்றைய தினம் இந்த இயற்கை அழிவுச் சம்பவம் இடம் பெற்றது. பேருவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தொடர்ச்சியாக பெரும் மழைப் பொழிவு இருந்து வருகின்றது.

இதன் காரணமாகவே பள்ளத்தாக்கான நிலப்பகுதியொன்றில் பெருமளவில் மண் சரிவும் நிகழ்ந்திருப்பதுடன் பாறைப் பெயர்வும் இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அழிவுச் சம்பவம் இடம் பெற்ற பள்ளத்தாக்குப்பகுதி. பேருவின் தலைநகரான லீமாவுக்கு வடமேற்கே 420கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

உயிரிழப்புகளுடன் மக்களின் சொத்துக்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கானவர்கள் தமது வீடு வாசல்களை இழந்துள்ளனர். 20க்கு மதிகமான மோட்டார் வாகனங்களும் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன. (கி)

## ஊரடங்கும் நேரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டில் அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் காலை ஐந்து மணிக்கு தளர்த்தப்பட்டு இரவு ஏழு மணிக்கு அமுல் செய்யப்படும்.

## கட்டாக்காலி மாடுகள் தொல்லை

[கோப்பாய்]

கோப்பாய் பகுதியில் கட்டாக்காலிமாடுகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது. கட்டாக்காலிகளை இரவு வேளையில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருப்பதினுல துரத்தவும் முடியாதுள்ளதென விவவாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்,

## தென்பகுதியில் பாடசாலை உப அதிபர் சுட்டுக்கொலை!

[கொழும்பு]

அக்குரஸ பகுதியில் கல்லூரி ஒன்றின் உப அதிபர் ஒருவர் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினுல் கடந்த திங்கட்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பாடசாலை அதிபருடன் மோட்டார்சைக்கிளில்சென்றுகொண்டிருக்கும் போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்திற்கும் ஜே. வி. பி. தீவிரவாதிகளுக்கும் தொடர்பிருக்கலாமென பொலிஸார் தெரிவித்துள்ளனர். [சி]

## மோட்சதீப அழைப்பு

**வைத்திய கலாநிதி வீ.பஞ்சாட்சரம**

(பலாலி ஐயர்)

அம்மாமடியில்
12- 02- 1919
அம்பாளின் அடியில்;
1- 01- 1988

பிரபல வாதரோக வைத்தியர் ''பலாலி ஐயா'' எனப்படும் வைத்திய கலாநிதி வீ பஞ்சாட்சரம் அவர்களின் மோட்சதீப விழா (இன்று) வெள்ளிக்கிழமை 5-02-1988ல் நண்பகல் ''வீணுகானம்'' மயிலிட்டியில் சொந்த இல்லத்தில் நடைபெறும். உற்ருர், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

மகள் மருமக்கன்,
வைத்திய கலாநிதி
வி. பாலகுமார்
குடும்பம்.

மகள்: மலைமகள்,
மருமகன்:வி.பாலகுமார்.

(சி 2033)


## விக்னு டியுசன் சென்றர்

52, ஸ்ரான்லிரேட், யாழ்

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கும் O/L வகுப்புக்களுக்கும் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L கலை, வர்த்தக

**88 மீட்டல்**

**Day Classes** (7-15 a. m.)

**ஆரம்பமாகிவிட்டன**

மு. குறிப்பு

1. Day Classes எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகின்றன.
2. வாரத்தில் ஐந்து நாட்களும் சகல பாடங்களும் நடைபெறும்.
3 விடுதி வசதி செய்துகொடுக்கப்படும்.

எ-2510


## சைவ வித்தியா

## விருத்திச் சங்கம்

### அநாதைச் சிறுவர்கள்

### புனர்வாழ்வுத் திட்டம்

நான்கு வருடமாக குறிப்பாகக் கடந்த ஆண்டு இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக யாழ். குடாநாட்டில் ஆயிரக்கணக்கான சிறுர்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ளார்கள். தாய், தந்தை, பராமரிப்பாளர் முதலியோரைப பறிகொடுத்தோ அல்லது அங்கவீனமாக்கப்பட்டோ, அதன்மூலமாக உழைப்பை இழந்தவர்களாக்கப்பட்டும், இல்லிடம் மற்றும் வருமானச் சொத்துக்கள் முதலியவற்றை இழந்ததன்மூலமாகவும் வாழ வழியின்றித் தவிக்கின்ருர்கள். அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் நோக்கததுடன் எமது சங்கம் திட்டங்கள் வகுக்கின்றது. அரசாங்கத்திடமிருந்தும், வெளிநாட்டு உதவி ஸ்தாபனங்களிடமிருந்தும், உள்ளூரிலிருந்தும் பெறக்கூடிய நிதி உதவியை வெகு விரைவில் பெற்று எமது திட்டத்தை அமுலாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கின்ருேம். இத்திட்டத்தின்கீழ் உதவிபெற விரும்புவோர் எமக்கு உடனடியாகப் பின்வரும் விபரங்களோடு விண்ணப்பிக்கவும்:-

1. விண்ணப்பதாரரின் பெயர், விலாசம், வயது, தொழில்
2. அரசாங்க அதிபர் பிரிவு.
3. குடும்பத்திலுள்ள அநாதைச் சிறுர்களின் விபரம்:- பெயர், வயது, கல்வி நிலை.
4. அநாதை நிலைக்குள்ளாக்கப்பட்ட விபரம்.
5. இப்பொழுது எவ்வாறு சீவிக்கின்ருர்கள்?
6. எவ்வித உதவி தேவைப்படுகின்றது?
   (அ) பிள்ளைகளை வளர்ப்பதற்கு போதாந்த உதவித் தொகை.
   (ஆ) அநாதை இல்லங்களில் சேர்ப்பது.
   (இ கனவான்களிடம் வளர்ப்புப் பிள்ளையாகக் கொடுப்பது.
7. உற்ருர், ஊரார் உதவி பெறுவதிலுள்ள பிரச்னைகள்.
8. குழந்தைகள் பெயரிலுள்ள சொத்துக்கள்.

மேற்கூறிய விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதியளிக்கின்ருேம். தேவைப்படின் அத்தாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படும்.

இங்ஙனம்
பெற்ருேர் / பாதுகாவலர்

குறிப்பு:- இத்திட்டத்தில் ஆர்வமுள்ள தொண்டர் ஸ்தாபனங்களையும், சமூக சேவையாளர்களையும் எம்முடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்ருேம்.

**செயலாளர்,**

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி

(சி-2024)

### மணிவாக்கு

மருந்துக்கு நஞ்சு தேவைப்படுவதுபோல் திருடர் இல்லாது உலகம் தொழிற்படாது.

—எமர்சன்

# நமதுநோக்கு

## தருமத்துடன் கூடிய சமாதானம்

பெண்களுக்கு அன்பு இயற்கையான குணம். அக்கிரமங்களையும் அநீதியையும் கண்டு அஞ்சுவதோடு அவற்றை வெல்ல படை திரட்டும் சாமர்த்தியம் பெண்களில் உண்டு. மட்டுநகர் மாதர் இதற்குப் புறம்பானவர்கள் அல்ல.

தெற்கில் இளைஞர் நடத்தும் போர் வேறுவிதமானது. தங்கள் அரசுக்கு சவால் விட்டு, ஈடாட் தங்கள் சமூகத்துக்குரிய சௌகரியங்களைப் பெறுவதே அவர்களின் முக்கிய நோக்கம், தமிழ்மக்கள் பேரில் நடக்கும் போராட்டம், தமிழரும் ஒரு சுதந்திரத்தைக் கொண்டாட வல்ல இனமென்பதைக் கொண்டதே!

எங்கு பார்த்தாலும், தமிழும் சிங்களமுமென்ற ஒன்றுபட்ட ஆட்சிமுறை மருந்துக்கும் காணமுடியவில்லை. இது இயற்கைப் பிரிவினை அல்ல. இந்த அழகிய சிறு தீவில் வாழும் எல்லாச்சமூகங்களும் ஒன்றுபட்டு வாழமுடியும். ஆனால் அது முயற்கொம்பு போலிருக்கிறது. பொறுமை என்பதே அடிப்படைக்காரணம். இவர்கள் ஏன் நல்லவர்களாக இருக்கிறார்கள்? இவ்வித 'விளைவிலேயே' பொறுமை ஏற்படும். இது விசித்திரமானாலும் மறுக்க முடியாத உண்மை. தமிழ் மக்களோ சிங்கள மக்களோ தங்கள் சுயாட்சியில் பொறுமையை அகற்றிவிட முடியுமென்பது கருத்தல்ல.

குடும்பங்களின் நல்வாழ்வை அழித்துவரும் பொறுமை நாடளாவிய நிலையில் சமாதானத்துக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கச்செய்யும்

பொறுமை இரு பெரும் பிரபுத்துவ குடும்பங்களை அழித்துவிட்ட கதையை, பொறுமையின் கொடுமையை ஷேக்ஸ்பியர் எழுதிய றோமியோ அன்ட் யூலியட் என்ற நாடகத்தின் அற்புத பாக்களில் பார்க்கலாம். உண்மைக் காதலை சுக்குநூறுக்கி காதலர் வாழ்வைக் காலனுக்கு இரையாக்கியது.

இன்று அரசியல்துறை ஒரு புதிய கலையாக மெத்த வளர்ந்து சாதாரண சம்பவங்களுக்கே மிகப் பெரிய ஆராய்ச்சிக் கருத்துக்கள் வழங்கிவருகிறது. எத்தனையோ 'இசம்' ஒன்றுகூடியும் புறறெடுக்க முடியாத நிலையென்றால் எம்போன்ற சாதாரணர் பரக்க முழிக்க வேண்டியதுதான்.

அதனைவிட்டு, இந்த நாட்டில் வாழும், இரு சகோதர இனங்கள் ஒரு தாய் பிள்ளைகளானாலும், உடன்பிறந்தே கொல்லும் பல வினைகளுக்கு நீண்டகாலம் பலியாகின்றோம்.

இன்றும் முடிவடையா யுத்தம் இந்த உண்மையை நிரூபிக்கின்றது. நாம் ஒன்றுபட்டு இருப்பது நாட்டுக்கு நல்லது; ஒரு நாட்டில் இரு சமூகங்களாக, தத்தம் சுயாதீனத்தை அனுட்டித்து நாடளாவிய நிலையில் ஒருமைப்பட்டு வாழ வழிகாணவேண்டும்.

தமிழ் மக்கள் ஏற்காத அரசியல் அமைப்பு, அவர்களை ஒருபோதும் கட்டுப்படுத்தமாட்டாது. இந்த உண்மையை மழுப்பிவந்த காலம் இன்றைய ஆயுதப் போராட்டத்துடன் மலையேறிவிட்டது.

இது இவ்வாறனால் வடக்கிலும் கிழக்கிலும் பல வருடப் போருக்குப் பலியாகி, தப்பிவாழும் மக்களுக்குச் சமாதான வாழ்வே முதற் தேவை. குடும்ப வாழ்வில் அமைந்த சமூகம் எவ்வாறு சின்னபின்னப் பட்டிருக்கிறதென்பதைத் தாய்க்குலமே நன்கறியும்.

பெண்குலம் பொறுமையின் இருப்பிடம். இன்று அவர்களே பொறுமை இழந்த நிலையில் இருப்பதை போரின் கொடுமைகளை அனுபவித்த நாம் நன்கறிவோம்; மட்டக்களப்பு அன்னையருக்கு இது இரண்டாம் சுயம்வரம்.

தருமத்துடன்கூடிய சமாதானமா, அல்லது போரின் தொடர்ச்சியா? மக்களின் விருப்பம் பிரத்தியட்சம். இதற்கு முடிவுகட்ட மூனையும் மட்டக்களப்பு அன்னையர் முன்னணி இந்தியப் பிரதமர் தொடக்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வரைக்கும் போர் நிறுத்தம் பற்றி மகஜர் அனுப்பியிருக்கின்றனர்.


எவ்வாறு இலங்கை ஜனாதிபதி இந்தியாவின் உதவிகோரி அங்கு சென்றாரோ, அவ்வாறே சகிக்க முடியாத நிலையில் மட்டக்களப்பு மாவட்ட அன்னையர் முன்னணி தாம்படும் துன்பத்தைத் துடைக்கவேண்டுமென்று இந்தியப் பிரதமர் தொடக்கம் இதில் தொடர்புடைய அனைவருக்கும் விண்ணப்பித்திருக்கின்றது.

விதிவசத்தால், மதிமயக்கத்தால் உண்டான அழிவை நிறுத்தி மக்கள் புனர்வாழ்வுக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். வி ராதங்கள் பாராட்டுங் காலம் இதுவல்ல.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1988-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81. Eelanadu P.O Box, No:49. Telegram, Eelanadu, Telephone: 22389, 24126.

## 'பாரதரத்ன' எம்.ஜி.ஆர். சிலை திறப்புவிழா



குருநகரில் நடைபெற்ற முன்னாள் தமிழக முதல்வர் 'பாரதரத்ன' எம். ஜி. இராமச்சந்திரனின் சிலை திறப்புவிழா வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள். சங்கீதபூஷணம் பொன். சுந்தரலிங்கம் எம். ஜி. ஆர். புகழ்பாடுவதையும், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் எம். ஜி. ஆரின் சிலையை திறந்துவைப்பதையும் இலங்கை அ. தி. மு. க. தலைவர் பொன் மதிமுகராஜா தலைமையுரை நிகழ்த்துவதையும் இங்கு காணலாம்.

### எதியோப்பியாவில்---

## 50 லட்சம் மக்கள் பட்டினியால் பரிதவிப்பு

அடிஸ்அபாபா, பெப்.4

எதியோப்பியாவின் வடபகுதியில் 50 லட்சம் மக்கள் பட்டினியால் பரிதவிப்புக்குள்ளாகியுள்ளனர்.

எதியோப்பியாவில் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் நிலவிய பட்டினி நிலைமைமீண்டும் தலைதூக்கியுள்ளதாக ஐ. நா. ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

உலக நாடுகள்பலவும்,உதவி ஸ்தாபனங்கள் பலவும் உணவு வகைகளை எதியோப்பியாவுக்கு அனுப்பி வைத்துள்ளன ஆயினும் பாதிக்கப்பட்ட மக்களை அவை சென்றடைவதில்பெரும் தடங்கல்கள் இருந்துவருகின்றன.

எதியோப்பியாவின் வடபகுதியில் இடம்பெறும் கிளர்ச்சிப் படைகளின் மோதல்களே இத்தடங்கலுக்கு முக்கியகாரணமாகும்.

இப்பாரிய பட்டினி நிலைமை காரணமாக லட்சக்கணக்கானவர்கள் மரணத்தின் விளிம்பில் இருப்பதாகவும் ஐ. நா. ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது, [கி]

## சம்பள முற்பணம் கழிக்கப்படுகிறது

[பலாலி]

யாழ் மாவட்ட அரசு திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த ஆண்டு நவம்பரில் வழங்கப்பட்ட சம்பள முற்பணம் 1000 ரூபா சென்ற மாத சம்பளத்திலிருந்து மீளப் பெறப்பட்டுள்ளது.

ஊழியர்களின் சம்பளத்துக்கு ஏற்றவாறு 1000, 500 ரூபா என்ற ரீதியில் மீளப் பெறப்படுகிறது.

## ஐ. ஆர். ஏ. ஆயுதங்கள் பெருமளவில் சிக்கின!

பெல்பாஸ்ட் பெப், 4

ஐரிஸ் கெரில்லாக்களின் [ஐ. ஆர். ஏ) பெருமளவிலான நவீனரக ஆயுதங்கள் பிரிட்டிஷ் பாதுகாப்புப் படைகளிடம் சிக்கியுள்ளன.

றொக்கட் லோஞ்சர்கள், ரிவோல்வர்கள், தன்னியக்க ரைபிள்கள், இயந்திரத் துப்பாக்கிகள், 12 ஆயிரம் சுற்று ரவைகள் மற்றும் வெடிமருந்துகள் என்பனவே கைப்பற்றப்பட்டவையாகும்.

டிரக் வண்டியொன்றில் கொண்டுவரப்பட்ட சமயமே இவை நேற்றுச் சோதனையின் போது கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

### அபிவிருத்தி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லகங்களும் பிரதேச சபைகளாக மாற்றம்பெற்று காங்கேசன்துறை பிரதேசசபையின் கீழ் இயங்கும். இவற்றின் தலைமையகமாகக் காங்கேசன் துறைப் பிரதேச சபை இயங்கும்.

## காப்டன் வெங்சாகருக்கு தடை, அபராதம்!

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் திலிப் வெங்சாகர் அடுத்த ஆறுமாத காலத்திற்குச் சர்வதேச கிரிக்கெட்போட்டிகள் எதிலும் கலந்துகொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பத்தாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் விதிகளைமீறி புத்தகமொன்றினை வெளியிட்டமைக்காகவே காப்டன் வெங்சாகருக்கெதிராக இத்தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கடந்த இரு மாதங்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மே. இந்திய அணிக்கெதிரான போட்டிஒன்றில் பலத்த காயமடைந்த வெங்சாகர் கடந்த பலபோட்டிகளில் பங்குபற்றவில்லை. இவ்வேளையில் வெளியிடப்பட்ட புத்தகமொன்றே சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது.

இந்தியஅணி வீரர்கள் போட்டிகளில் கலந்துகொள்ளும் காலத்தில் பத்திரிகைகளுக்கோ, சஞ்சிகைகளுக்கோ பேட்டிகள், கட்டுரைகள் வழங்கக்கூடாதென்பது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விதிகளில் ஒன்றாகும்.

எனினுங் காப்டன் வெங்சாகருக்கெதிரான இத்தடை உத்தரவு ஏனைய இந்திய அணி வீரர்களிடையே பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (சி)

### அ. தி. மு. க.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னர் என்றும் இதன் காரணமாகவே பொதுச்சபைக் கூட்டத்தில் சிலர் கலந்து கொள்ளவில்லை என்றும்தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் அதிமுகவைச் சேர்ந்த செல்வி ஜெயலலிதா, நெடுஞ்செழியன் மற்றும் முந்நாள் அமைச்சர்கள் சிலரை வெளியேற்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

செல்வி ஜெயலலிதா கோஷ்டியினர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. (கி)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா தர்மலிங்கம்

அராலி வடக்கு கனகம்மா தர்மலிங்கம் 01-02-88 அன்று காலமானார் இவர் காலஞ்சென்ற சி. தர்மலிங்கம் (இராசா விதானை) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சிவனம்மா, இராமநாதன், தவரத்தினம் (உள்ளூராட்சி திணைக்களம் வவனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராமநாதன் (லேக்ஹவுஸ் பத்திரிகை உதவி ஆசிரியர்), திருமதி சிவகாமசுந்தரியின் அன்பு மாமியாரும் சுரேஸ்குமார், சிவந்தி, கிறிஸ்சாந்தி, துஷ்யந்தி ஆகியோரின் அருமைப்பேத்தியுமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் 02-02-88இல் நடைபெற்றது.

சி-2040

தகவல்; தவரத்தினம்